# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2017.02.13

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 05/2017**

பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

## <u>நிறுவகங்களுக்கான ஆளணியை நியமித்தல்</u>

மேற் குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 1983 ஜுன் மாதம் 23 ஆம் திகதிய 233 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 2 (ii) ஆம் பந்தியின் மீது தங்களது கவனம் ஈருக்கப்படுகின்றது.

02. கற்கைப் பிரிவுகள் செயற்படும் நிறுவகங்களில் பேராசிரியர் அல்லது நூலகர் பதவிகள் தவிர்ந்த விரிவுரையாளர் பதவிகளுக்கான தெரிவுக் குழுவின் அங்கத்தவராக, குறிப்பிட்ட கற்கைப் பிரிவின் தலைவரை உள்ளடக்குவதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தீர்மானித்துள்ளது.

03. அதற்கமைய, பேராசிரியர் அல்லது நூலகர் பதவிகள் தவிர்ந்த விரிவுரையாளர் பதவிக்கான நியமனம் அல்லது பதவி உயவுக்கான தெரிவுக் குழு கீழ் குறிப்பிடப்படுமாறு அமைந்திருத்தல் வேண்டும் :

அ) தலைவராகப் பணியாற்றும் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்

ஆ) ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட இலங்கையின் எந்தவொரு பல்கலைக்கழகத்தினதும் குறிப்பிட்ட பீடத்தின் பீடாதிபதி

இ) குறிப்பிட்ட கற்கைப் பிரிவின் தலைவர் <u>(கற்கைப் பிரிவுகள் செயற்படும் நிறுவகங்களுக்கு மாத்திரம்)</u>

குறிப்பிட்ட கற்கைப் பிரிவின் தலைவர் குறிப்பிட்ட பதவிக்கான விண்ணப்பதாரியாக இருப்பின் அல்லது குறிப்பிட்ட கற்கைப் பிரிவில் நிரந்தர தலைவர் ஒருவர் இல்லாதிருப்பின், சந்தர்ப்பத்திற்கேற்ப கற்கைச் சபை அல்லது அதற்குச் சமமான அதிகார சபையொன்று தனது அங்கத்தவர்களிடையே குறிப்பிட்ட கற்கை நெறி சம்பந்தமான அறிவையுடைய ஒரு அங்கத்தவரை கற்கைப் பிரிவுத் தலைவருக்குப் பதிலாக நியமித்தல் வேண்டும்.

ஈ) முகாமைத்துவ சபை, தனது அங்கத்தவர்களிடையே பெயர் குறிப்பிடப்பட்ட குறைந்தது இருவர் மற்றும் ஆணைக் குழுவினால் நியமிக்கப்பட்ட நான்கு அங்கத்தவர்கள்.

04. இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் 2017.02.15 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்படுவதுடன், அந்தத் திகதி முதல் 1983 ஜுன் மாதம் 23 ஆம் திகதிய 233 ஆம் இலக்க ஆணைக் குழுச் சுற்றறிக்கையின் 2 (ii) ஆம் பந்தி இரத்துச் செய்யப்படுகின்றது.

05. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம்: பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.
11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளர்கள் /சிரேஷ்ட உதவி நிதிப் பொறுப்பாளர்கள்/ உதவி நிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் தலைமை அதிபதி.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/3/85